

FREE EDITION

April - 2018

# ஜோதி

**Jothi**
**Spiritual Newsletter**

ஜோதி 12 : சுடர் 02-134

**ஆன்மிகச் செய்திச்சுடர்**

**மூல மந்திரம்**

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!

*

**சக்திகள் அனைவருக்கும் எமது**

**சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு**

**வாழ்த்துக்கள்**

**14.04.2018**

## மௌன விரதம்

**“தினந்தினம் மூன்று வேளை நன்றாகச் சாப்பிட்டுக்கொண்டு மௌனமும் இருந்தால் பயன் கிடைக்கும் என்று நினைத்துக் கொள்ளக்கூடாது. நினைக்கிற போது மௌனம் இருப்போம் என்று கருதி மௌனம் இருப்பதிலும் பயனில்லை. உன்னுடைய கடைசி மௌனமும் என்னிடமே. எனினும் நீ மௌனம் இருக்கும்போது தான் நான் உன்னைச் சீண்டிவிட்டுச் சோதிப்பேன்.”**

**அன்னையின் அருள்வாக்கு**

## சோதனைகள் சாதனைகளாகும்

“பக்தி மிக்கவர்கட்குச் சோதனைகள் அதிகமாகும். அந்தச் சோதனைகள் அதிகமாயின் சாதனைகள் அதிகமாகும்” என்பது அன்னையின் அருள்வாக்கு.

“உங்கள் ஒவ்வொருவரையும் புடம்போட்டு தங்கமாக்க வேண்டியே சிலருக்குச் சோதனைகள் வைக்கிறேன். இந்தச் சோதனையில் வெற்றி பெற்றால் அதுவே உங்கள் சாதனைகளாக மாறிவிடும்” என்கிறாள் அன்னை.

இந்தச் சாதனையாளர்கள் மிக விரைவில் ஆன்ம வளர்ச்சி பெறுபவர்கள். மிக விரைவில் பிறவிக் கணக்கை முடிப்பவர்கள்.

சோதனைகட்குப் பயந்து அளவோடு தெய்வத்தை நெருங்குபவர்கள் அன்னைக்கு மிக நெருக்கமாக வர முடியாது.

ஓர் ஆன்மா பழம்பிறவிகளில் செய்த கரும வினைகளின் பயனாகப் புல்லாகிப் பூண்டாகி, புழுவாகி, மரமாகி, பல மிருகமாகிப் பறவையாய், பாம்பாய், கல்லாகி, மனிதராய், பேயாய், தேவகணங்களாய், அசுரராய், தேவராய்ப் பிறந்தும் இறந்தும் அச்சுமாறி வருகிறது.

**சக்தி வேலுசாமி**
மேட்டூர்

நீண்ட நெடிய இந்த ஆன்மாவின் பயணத்தில் இப்போது நாம் உயிர் வாழும் வருடங்களின் கணக்கை வைத்துப் பார்த்தால் மிகவும் அற்பமான வருடங்களே!

ஓர் ஆன்மா பிறவிக் கணக்கை முடித்துக் கொண்டு முக்தி அடைவது – பிறவிக் கணக்கைப் பூர்த்தி செய்து கொண்டு ஆன்ம விடுதலை பெறுவதுதான் மிகப் பெரிய சாதனை!

முக்தி கிடைப்பது என்பது அவ்வளவு சாதாரணம் அல்ல. கோடியில் ஒரு சில ஆன்மாக்களே முக்தி பெறும் தகுதியைப் பெறுகின்றன. ஒரு சில ஆன்மாக்களே ஆன்ம வட்டத்தைப் பூர்த்தி செய்து இலட்சியத்தை அடைகின்றன.

ஓர் ஆன்மா முக்தி அடைவதற்கு ஆயிரம், பத்தாயிரம், இலட்சம் ஆண்டுகள் ஆகலாம். ஏன் கோடிக்கணக்கான ஆண்டுகள் கூட ஆகலாம். ஒரு யுகம் வரை அணு வடிவில் கிடந்து மற்றொரு யுகத்தில் பிறவிக்கு வந்தாலும் வரலாம்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**“இனி தரும நெறியைக் காப்பவர்களுக்குத்தான் காலம். அக்கிரமம், ஆணவம் கொண்டவர்களுக்குக் காலமில்லை”.**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப் படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


சோதனைகள் சாதனைகளாகும் — Page: 1 – 4

எந்நாட்டவர்க்கும் தாய்..நானே! — Page: 7 - 14

UPCOMING EVENTS
Melbourne: 5, 11, 17
Sydney: 8, 10

திருமதி அம்மா பதில்கள் — பக்கம்: 5

திருஷ்டி கழிப்பதன் அவசியம் — பக்கம்: 6

Divine Miracles — Page:16

சித்தர்பீட விழாக்கள் — பக்கம்: 15

ஆன்மிக நாட்குறிப்பு — பக்கம்: 18


# சோதனைகள் சாதனை...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

"நீங்களெல்லாம் கலியுகத்தில் வந்து மாட்டிக்கொண்டீர்கள்!" என்று அன்னை சொல்வதில் உள்ள நுட்பத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

"ஆத்மா மாயையைத் தேவர்களாலும்கூட அறிந்து கொள்ள முடியாது" என்று மகாபாரதத்தில் வியாசர் கூறுகிறார். ஒவ்வொரு ஆன்மாவுக்கும் பிறவி இரகசியங்கள் உண்டு. சில தேவ இரகசியங்கள் உண்டு.

நம் அன்னை இந்த அவதார காலத்தில் பலர் அனுபவங்கள் மூலமாகவே சில ஆன்மிக உண்மைகளை நாமாகப் புரிந்து கொள்ள வைக்கிறாள்.

அம்மாவின் பின்னால் ஓடி வந்தபடி இருந்தால் மேலும் பல உண்மைகளை அனுபவத்தால் அறியலாம்.

எங்கள் பகுதியில் உள்ள மகளிர் மன்றத் தலைவியாக இருக்கும் சக்தி தங்கம் நம் அம்மாவிடம் அதிக பக்தி கொண்டவர்.

"ஒவ்வொரு அமாவாசையின்போதும் அரை மூட்டை அரிசிக்குக் குறையாது அன்னதாம் செய்து வா மகளே!"என்பது அம்மா உத்தரவு. அதன்படிச் சிரத்தையாக அன்னதானம் செய்து வந்தார் அவர்.

ஒரு முறை பக்கத்து கிராமத்தில் இருக்கும் தந்தையின் உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது என்ற செய்தி வந்தது. சக்தி தங்கம் பதறியடித்துக்கொண்டு ஓடினார். நல்ல உடல் நலத்துடன் இருந்த தந்தை படுத்த படுக்கையாகிவிட்டது கண்டு துடித்தார். கூடவே இருந்து தந்தைக்கு உதவிகள் செய்தபடி இருந்தார். தந்தையின் உடல்நிலையில் ஒரு சிறிதும் முன்னேற்றம் இல்லை.

இந்த நிலையில் நம் ஆன்மிக குரு அடிகளார் அவர்களின் பிறந்தநாள் விழா நெருங்கிற்று.

அம்மாவின் அவதாரத் திருநாள் ஆயிற்றே! மற்ற விழாவுக்குப் போக முடியாவிட்டாலும் பரவாயில்லை. இந்த விழா நமக்கு முக்கியமாயிற்றே..! சேலம் மாவட்டத்துக்கு விழாப் பொறுப்பு தரப்பட்டிருக்கிறதே.. மற்ற மன்றங்களைவிட நமது மன்றத்தின் வசூலை அதிகமாகக் காட்ட வேண்டும் என்றெண்ணி விழாவுக்கு நன்கொடை திரட்டிக் கொண்டு இருந்தார்.

விழாநாள் நெருங்கிற்று. மார்ச் 3 வரை தந்தையின் உயிர் தாங்குமா என்ற கவலை ஒரு புறம்! அம்மா பிறந்த நாள் விழாவுக்குப் போக முடியாமல் போய்விடுமோ என்ற ஏக்கம் மறுபுறம்! தரும சங்கடம் என்பது இதுதான். அந்தச் சங்கடத்தில் சக்தி தங்கம் தவித்தார்.

பெப்ரவரி 28! "அப்பா! எல்லோரும் அம்மா பிறந்தநாள் விழாவிற்குப் போகிறார்கள். நமது மாவட்டம் விழா பொறுப்பு ஏற்று நடத்துகிறது. நான் ஒரு மகளிர் மன்றத்துக்குத் தலைவி. போவதற்கு ஆவல்! உங்களை விட்டுப் போகவும் கவலை! எனக்குப் குழப்பமாய் இருக்குதப்பா.."என்றாள் மகள்.

(தொடர்ச்சி…3ஆம் பக்கம்)

# சோதனைகள் சாதனை...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

“தைரியமாய்ப் போய் வாம்மா…அதற்குள் எனக்கு ஒன்றும் ஆகிவிடாது!” என்று சைகையாலேயே விடை கொடுத்தார் தந்தை.

பெட்டி படுக்கை எடுத்துக் கொண்டு கிளம்பினார் சக்தி தங்கம்.

“பெற்ற தகப்பன் இப்படிக் கிடக்கிறான். அவனை விட்டு விட்டு அப்படி என்ன திருவிழா வேண்டிக் கிடக்கிறது?”

“கல் நெஞ்சக்காரி! என்னதான் சாமி பக்தி என்றாலும் சாகக் கிடக்கிற தகப்பனை விட்டுக் கண்டும் காணாமல் போவார்களா?”

“அப்படி என்ன சாமி வேண்டிக் கிடக்கு! கோயில் வேண்டிக் கிடக்கு!” – வீட்டுக்கு வந்திருந்த சொந்தபந்தங்கள் விமர்சித்தபடி இருந்தன.

மருவத்தூர் வந்தடைந்த சக்தி தங்கம் நான்கு நாட்கள் பம்பரமாகப் பணி செய்தார். அன்னதானம், கருவறைப்பணி இரண்டிலும் சேர்ந்து பணி செய்தார்.

விழா முடிந்தது. எல்லோருக்கும் திருஷ்டி கழத்த பிறகு அவரவரும் ஊர் திரும்ப ஆயத்தமாயினர்.

நான்கு நாட்கள் எந்தக் கவலையும் இன்றிப் பணியின் மும்மரத்தில் இருந்த சக்தி. தங்கத்திற்கு தந்தையின் நினைவு வந்து நெஞ்சைப் பாரமாக அழுத்தியது.

அப்பாவுக்கு இந்நேரம் என்ன ஆயிற்றோ.. அப்படி ஆகியிருந்தால் கோயிலுக்கு ஆள் வந்திருக்குமே.. அப்படியே ஆள் வந்திருந்தாலும் இந்தக் கூட்டத்தில் தேடித் தகவல் சொல்வது மிகக் கஷ்டம் ஆயிற்றே..!

தாயே..! என் அப்பாவுக்கு ஒன்றும் ஆகியிருக்கக் கூடாது! என்று வேண்டியபடி ஊருக்குக் கிளம்பினார்.

அவசர அவசரமாகத் தந்தையைப் பார்க்க விரைந்தார். வீட்டை அடைந்ததும் என்ன ஆச்சரியம்! படுத்த படுக்கையாக இருந்த அவர் எழுந்து உட்கார்ந்தபடி இருந்தார். தன் கண்களையே நம்ப முடியவில்லை.

“அப்பா! இப்போ எப்படிப்பா இருக்கு உடம்பு?” என்றார்.

“இப்படி பக்கத்தில் வந்து உட்காரும்மா!” என்று அமரச் சொன்னார்.

“இந்தாப்பா! அம்மா பிரசாதம்! இந்தக் கலச தீர்த்தம் குடிப்பா! எப்படியோ அம்மா உன்னைக் காப்பாற்றி விட்டதுப்பா!” என்று பூரித்தார் மகள்.

“தங்கம்! நீ கோயிலுக்குப் புறப்பட்டுச் சென்ற அன்றைக்கு இங்கே நடந்ததைச் சொல்கிறேன் கேள்.

அன்று இரவு! நான் கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த சமயம்! யாரோ சிலர் என்னைக் கட்டிலோடு எங்கோ ஏதோ ஓர் உலகத்துக்கு எடுத்துச் செல்வது போலவும் அப்போது திடீரென்று பல செவ்வாடை சக்திகள் ஓடி வருவது போலவும் என்னைத் தூக்கி வந்தவர்கள் என்னைக் கட்டிலோடு போட்டு விட்டு ஓடுவது போலவும் ஒரு காட்சி கண்டேன். அது கனவா.. நனவா.. மனப்பிரமையா.. ஒன்றும் தெரியவில்லை.

வந்தவர்கள் எம தூதர்களா.. அது என்ன எமலோகம் என்றெல்லாம் சொல்கிறார்களே அதுவா..? ஒன்றும் புரியவில்லை!

அப்புறம் பார்க்கிறேன். உடம்பிலே சற்று தெம்பு! இனி என்ன வேண்டிக் கிடக்கு. உங்களையெல்லாம் ஆளாக்கி விட்டாச்சு! இனி என்ன ஆக வேண்டிக் கிடக்கு. போய்ச் சேர வேண்டியதுதான்..!” என்று தெளிவாகப் பேசினார்.

(தொடர்ச்சி..4ஆம் பக்கம்)

# சோதனைகள் சாதனை...

(3ஆம் பக்க தொடர்ச்சி)

தன் அப்பாவை அம்மா காப்பாற்றிய சந்தோஷம் ஒருபுறம்! யாரோ இவரைக் கட்டிலோடு தூக்கிச் சென்றதும் ஏதோ ஒரு உலகம் என்று சேர்வதும், செவ்வாடைத் தொண்டர்கள் பின் தொடர்ந்து வந்ததும், எல்லாம் கேட்டு ஆச்சரியம் ஒரு புறம். இதையெல்லாம் யார் நம்பப் போகிறார்கள்? என்று எண்ணியபடி நான்கு நாட்கள் தகப்பனாரோடு தங்கியிருந்தார் சக்தி தங்கம். தந்தைக்கு வேண்டிய பணிவிடைகள் செய்து கொண்டிருந்தார்.

நான்கு நாட்கள் கழித்து மீண்டும் தந்தைக்கு உடல் நிலை மோசமாயிற்று. தந்தையை மடியில் கிடத்திக் கொண்டு மீண்டும் கலச தீர்த்தம் ஊட்டினார். வாயில் பாலும் ஊற்றினார்.

தன் அன்பு மகளின் மடியில் அந்தப் பெரியவரின் ஆன்மா அமைதியோடு விடை பெற்றுக் கொண்டது.

அந்த ஆன்மாவுக்கு வரையறுக்கப்பட்ட நாட்கள் முடிந்து விட்டன. ஆயினும் சக்தி தங்கம் அம்மாவின் அவதாரத் திருநாளில் பணி செய்ய வேண்டிய நிமத்தம் காரணமாக ஐந்து நாட்கள் மேலும் நீட்டித்துத் தரப்பட்டது. எமலோகம் சென்ற உயிர் திரும்பி வந்ததுவே ஓர் அதிசயம்!

இறைவனுடைய உண்மை அடியார்க்கு எம பயமும், மரண பயமும் இருக்காது என்று பெரியவர்கள் சொல்வார்கள். உண்மை அடியார்களைக் கண்டு எம தூதர்களும் அஞ்சுவார்கள் என்று சொல்வதில் உண்மை இருக்கும் போலத் தெரிகிறது.


தங்கத்தின் தந்தையார்க்கு ஏற்பட்ட அனுபவம் அதனை நன்கு உணர்த்துகிறது.

ஓம் சக்தி!

ஆன்மிககுரு

அருள்திரு அடிகளார் அருளிய

# குரு உபதேசங்கள்



## விஞ்ஞான வளர்ச்சியும், மெய்ஞ்ஞான வளர்ச்சியும்

“விஞ்ஞானம் வளர வளரக் காட்டுமிராண்டிகள் போல வாழத் தொடங்கிவிட்டோம். இன்றைய மனித அறிவு மனிதனுக்குப் பயன்படவில்லை. அது பயன்பட்டால் உலகில் ஏன் இத்தனை குழப்பங்கள்? ஏன் இத்தனை சண்டை சச்சரவுகள்?

மெய்ஞ்ஞானம் வளர – வளரப் பண்புகள் வளரும் எதிர்ப்புகள் வளர – வளர ஆன்மிகம் வளரும்.”

ஏதோ ஒரு வகையில் ஆன்மிகம் வளர்கிறது.

“ஆன்மிகம் என்றால் என்ன என்பது தெரியாமலேயே இப்பொழுது ஏதோ ஒரு வகையில் வளர்ந்து கொண்டு வருகிறது”.

## நாத்திகம் வளர்ந்தது ஏன்?

“மூன்றாவது வீட்டுக்கு தீ வைத்தால் நமக்கு என்ன என்று இங்கிருப்பவன் நினைக்கிறான். அது நம் வீட்டையும் பாதிக்குமே என நினைக்க மாட்டேன் என்கிறான்.

ஒவ்வொரு மதம் இப்படி நினைப்பதால் தான் நாத்திகம் பெருகி வளர்ந்தது.”



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

இயற்கை பொய்த்துவிட்டது. பருவ மழை இல்லாததால் பெரும் வறட்சி அபாயம் ஏற்பட்டு, குடிநீருக்கே பஞ்சம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றிப் பலரும் பல கருத்துக்களைக் கூறுகிறார்கள். இதில் தங்கள் கருத்து என்ன அம்மா..? இதற்குத் தீர்வு காண வழி உண்டா அம்மா..?

நம் இந்திய நாடு பருவ மழையை நம்பி இருக்கின்ற நாடு. விவசாயம் முக்கியமான தொழில். மக்கள் தொகை ஒவ்வொரு ஆண்டும் அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ஒரு பக்கம் மழையின் ஆதாரமாக விளங்கும் காடுகள் அழிக்கப்படுகின்றன. இந்த நிலையில் இயற்கை பொய்த்துவிட்டதால் மக்கள் குடி தண்ணீருக்கே மிகவும் அவதிப்படுகிறார்கள். தென் இந்தியாவின் நெற்களஞ்சியம் என்று அழைக்கப்படும் தஞ்சையிலே பட்டினிச்சாவு என்று கேள்விப்படும்போது மனத்திற்கு மிகவும் வேதனையாக உள்ளது. நீர், நிலம், காற்று, ஆகாயம், நெருப்பு என்று ஐம்பூதங்களும், மனிதனின் ஐம்பூதங்களுக்குச் சமமானவை. மனிதன் தன் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தாமல் தீய செயல்களில் ஈடுபடும்போது தர்மம் அழிந்து அதர்மம் தலை தூக்குகின்றது. இயற்கையை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. முற்காலத்தில் தனக்குப் பயனளிக்கும் இயற்கையை முதன்முதலாகத் தெய்வமாக வழிபட ஆரம்பித்தார்கள். அதைத்தான் இன்றைக்கும், அம்மா இயற்கை வழிபாடு அவசியம் என்று வலியுறுத்துகிறார்கள். ஆராய்ச்சி என்ற பெயரில் நாம் இயற்கைக்கு அதிகமான தொந்தரவு கொடுக்கிறோம். ஆழ்கடல் ஆராய்ச்சி, விண்வெளி ஆராய்ச்சி, காடுகளை அழித்தல், மலைகளைக் குடைந்து நிலமாக்குதல், மாசுக்கட்டுப்பாடு இல்லாமல் புகை மண்டலத்தை உருவாக்குதல் போன்ற செயற்கைத் தன்மைகளால், இயற்கையின் புனிதத் தன்மை அழிக்கப்படுகிறது. மனிதனின் புனிதத் தன்மையும் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. மாதம் மும்மாரி பெய்த காலம் மாறி, வருடத்திற்கு ஒரு மழை கூடப் பொய்த்துவிட்டது. மனிதனின் அகம், புறம் இரண்டும் தூய்மையாக இருந்தால்தான் மழை வளம் பெருகும். இதற்குத் தீர்வு அம்மா அருள்வாக்கில் கூறுவது போல இயற்கையைப் பாதுகாத்துத் தெய்வமாக வழிபட வேண்டும். மனிதன் தூய வாழ்க்கை வாழ வேண்டும்.

□□□

நாலுபேரிடம் பழகுவதிலும், தருமம் செய்வதிலும் பார்த்துப் பழக வேண்டும் என்று அம்மா கூறுகிறார்கள். இதில் “தருமம்” என்பதில்தான் குழப்பம். பிச்சைக்காரர்களுக்குப் பிச்சை இடுவது தருமமா? குற்றமா? அவசரகதியில் அலுவலகம் சென்று திரும்பும் இக்காலகட்டத்தில், உண்டியலில் போட்டால் போதுமா? பிச்சைக்காரர்களுக்குப் போட்டால் போதுமா? மாதம் அல்லது வருடம் ஒரு முறை மருவூர் கோவிலுக்கு (அல்லது ஏதாவது ஒரு கோவிலுக்கு) நன்கொடை வழங்கினால் போதுமா? எதை அம்மா தருமம் என்கிறார்கள்? தங்களிடம் நான் சமர்ப்பித்துள்ள இந்தக் குழப்பத்திற்குத் தங்களுடைய தெளிவான வழிகாட்டல் தாருங்கள் அம்மா..

முதியவர்கள், வேலை செய்ய இயலாமல் நோய்வாய்ப்பட்டவர்கள், ஊனமுற்றவர்கள் ஆகியவர்களுக்கு உதவுவது தர்மம். கோயிலிலுள்ள உண்டியலில் பணம் போடுவது தெய்வத்திற்கு நாம் செலுத்தும் காணிக்கை. ஒழுங்காக நடைபெறும் நிர்வாகத்திற்கு நாம் கொடுக்கும் பணம் நன்கொடை (நல்ல காரியத்திற்குப் பயன்படும் தொகை). இந்த மூன்று வழிகளில் எது உங்களுக்கு விருப்பமோ அதைச் செய்யலாம். இதற்கு மேலும் குழப்பமாக இருந்தால் அடுத்த முறை மறுபடியும் எழுதினால் செயல்முறை விளக்கம் அளிக்கப்படும். எதில் குழப்பம் என்பதே இல்லாமல் போய்விட்டதே!

□□□

# திருஷ்டி கழிப்பதன் அவசியம்

- சக்தி விண்மணி, போடி.

**போ**டிநாயக்கனூர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தின் தலைவராக இருப்பவர் சக்தி ரங்கசாமி. ஆன்மிகப்பணி, சமுதாயப்பணி இரண்டிலும் ஆர்வமாக ஈடுபட்டுத் தொண்டு செய்து வருபவர்.

27.03.1990 அன்று அவரும் இளைஞர் அணியினரும் சேர்ந்து உழவாரப் பணியில் ஈடுபட்டபோது நடந்த நிகழ்ச்சி இது!

போடிநாயக்கனூர் ஜீவா நகரில் ஆதிபராசக்தி பொது வார வழிபாட்டு மன்றம் உள்ளது. அம்மன்றத்தின் அருகே பாழடைந்த கிணறு ஒன்றும், அதைச்சுற்றி முட்புதர்களும் படர்ந்து வளர்ந்திருந்தன. அவற்றையெல்லாம் வெட்டி அகற்றிச் சுத்தப்படுத்தும் பணியில் அவரும் தொண்டர்களும் ஈடுபட்டனர். அன்றைய தினம் அமாவாசைக்கு மறுதினம் ஆகும்.

எந்தப் பணியை மேற்கொண்டாலும், முதலில் தீபாராதனை செய்து, திருஷ்டி கழித்த பிறகே காரியத்தில் ஈடுபட வேண்டும் என்பது அன்னை நமக்குச் சொல்லித் தந்த பால பாடம்.

நடுப்பகல் 12.00 மணிக்கு சக்தி ரங்கசாமி திருஷ்டி கழிக்க வேண்டும் என்பதை மறந்தே போனார். விடுவிடுடென்று காரியத்தில் இறங்கிவிட்டார். கிணற்றைச் சுற்றியுள்ள புதர்களை வெட்டிக்கொண்டிருந்தார்.

அப்போது... அவருக்குத் தாகம் எடுக்க ஆரம்பித்து, தண்ணீரில் எலுமிச்சம் பழச்சாறு கலந்து குடித்தார். சற்றுநேரத்தில் கடுமையான வியர்வை ஏற்பட்டது. அதையடுத்து வாந்தி ஏற்பட்டது. சில விநாடிகளில் வயிற்றுப்போக்கு ஏற்பட்டது. வாந்தியும், வயிற்றுப்போக்கும் மாறி மாறி ஏற்பட்டதால் மயங்கி விழுந்த சக்தி ரங்கசாமியை அருகிலிருந்த தனியார் மருத்துவமனை ஒன்றில் சேர்த்தார்கள்.

நள்ளிரவு நேரம் அது! அவரது நாடித்துடிப்பு மோசமடைந்து கொண்டே வந்தது. தொடர்ந்து அவருக்கு குளுகோஸ் செலுத்தப்பட்டது.

வழக்கமாக டாலரை அணிகிற ரங்கசாமி அன்று டாலரை அணியாமலே உழவாரப் பணிக்கு வந்துவிட்டார்.

டாலர் ஒரு பாதுகாப்புக்கவசம்! அதையும் அணிந்திருக்கவில்லை. கிணற்றுக்கு திருஷ்டி கழித்துவிட்டு பணியில் ஈடுபட்டிருக்கவேண்டும். அதையும் செய்யவில்லை. ஆர்வக்கோளாறு காரணமாகப் பணியில் விரைந்து ஈடுபட்டதாலும், அங்கிருந்த தீய சக்திகளின் ஆதிக்கத்தாலும் அவருக்கு அபாயமான நிலை ஏற்பட்டது.

அவருக்குச் சிகிச்சையளித்த டாக்டரிடம் தொண்டர்கள் விசாரித்தனர். நாடித்துடிப்பு மோசமாகத்தான் இருக்கிறது. இரண்டு நாள் கழித்துத்தான் எதுவும் சொல்ல முடியும்"என்று டாக்டர்கள் கூறிவிட்டனர்.

என்ன செய்வது என்று புரியாமல் தொண்டர்கள் தவித்தனர். அன்னையிடம் மன்றாடி வேண்டினர். ஊத்தமபாளையம் வட்டத்தலைவர் வீட்டிற்கு ஓடிச்சென்று நிலைமையைக் கூறினர்.

அதுகேட்டு அவரும் கவலையடைந்தார். பளிச்சென்று ஒரு யோசனை உதித்தது. உடனே தன் வீட்டுப் பூசையறையைத் திறந்து, அன்னையை வேண்டிக்கொண்டு, வேள்விக்கலசத் தீர்த்தத்தை எடுத்துக் கொடுத்து, எப்படியாவது இதைப் புகட்டிவிடு! என்று சொல்லி அனுப்பினார்.

அவ்வாறே மருத்துவமனையில் கிடந்த ரங்கசாமியின் வாயைத் திறக்கச் செய்து கலச தீர்த்தம் ஊட்டினர். சில துளி தீர்த்தமே ஊட்ட முடிந்தது.

சில நிமிடம் கழித்தபிறகு, மெல்லக் கண் திறந்து பார்த்தார். ஓம் சக்தி! என்று மெல்லக் கூறினார். திடீரென அளவுக்கு அதிகமான வயிற்றுப்போக்கு ஏற்பட்டது.

அரைமணி நேரம் கழிந்தது. தொடர்ந்து வந்த வயிற்றுப்போக்கு கட்டுப்பட்டது. குடிக்கத் தண்ணீர் கொடுத்தார்கள். நல்லவேளை! வாந்தி வரவில்லை. அடுத்து நாடித்துடிப்பு சீராகிவிட்டது. "ஓரிரண்டு நாளில் குணமாகிவிடுவார். கவலைப்பட வேண்டாம்" என்றார் டாக்டர்.

திருஷ்டி கழிக்காமல் உழவாரப் பணியில் ஈடுபட்டதாலும் நடுப்பகல் 12.00 மணி என்பதாலும் தீய சக்திகளின் தாக்குதலுக்கு ஆட்பட்டார் ரங்கசாமி.

ஆயினும், அன்னையின் அருளாலும், வேள்விக் கலசத் தீர்த்தம் ஊட்டப்பட்டதாலும், உயிராபத்திலிருந்து மீட்கப்பட்டார்.

ஓம் சக்தி!

# எந்நாட்டவர்க்கும் தாய்.. நானே..!

1992ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் முதல் நாள். அன்று ஆங்கிலப் புத்தாண்டு தினமானதால் சித்தர்பீடம் திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. அன்னையின் தரிசனம் பெறுவதற்காகப் பல்லாயிரக்கணக்கானோர் காத்துக்கொண்டிருந்தனர்.

புத்தாண்டு தினத்தில் முதன் முதலாக உண்ணப்படுவது அன்னையின் பிரசாதமாக இருக்க வேண்டும் என்றதோர் பெருவிருப்பில் பெருந்திரளான கூட்டம் உணவுப் பிரசாதம் விற்கப்படும் ஸ்டால் முன்பு அலை மோதிக்கொண்டிருந்தது. அவர்களையெல்லாம் வரிசைப்படுத்தி நிற்க வைத்து விட்டு வெகு மும்முரமாகப் பிரசாதப் பொட்டலங்களை வினியோகித்துக் கொண்டிருந்தபொழுது, என்னுடைய பெயரைச் சொல்லி விளித்து.. அதோ! எதிரே வருகின்றார்கள் பார்...! யு டேக் சார்ஜ் ஆப் தெம் (You take charge of them) இது மேலிடத்து உத்தரவு என்ற குரல் அசரீரி போன்று ஒலித்தது.

அழைத்தது யாரென்று தெரியவில்லை, யாராயிருந்தாலும் நமக்கென்ன..? அதுதான் மேலிடத்து உத்தரவு என்று கூறிவிடார்களே! என்று தலையை நிமிர்த்தி எதிரே பார்த்த பொழுது, அங்கே வெளிநாட்டைச் சார்ந்த ஐவர் அதர்வண பத்ரகாளி கோவிலுக்கு படிக்கட்டுகளின் வழியாக இறங்கிச், சித்தர் பீடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். அவர்களில் மூவர் மகளிர், இருவர் ஆடவர். அவர்களை நெருங்கி, (“Our Hearty welcome to you all - Omsakthi. Where are all of you from? Please come in along with us to our Sidhar Peetam” (ஓம் சக்தி) தங்கள் அனைவருக்கும் எங்களுடைய இதயங்கனிந்த வரவேற்புகள் உரித்தாகுக! தாங்கள் அனைவரும் எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள்? தயவுசெய்து எங்களோடு சித்தர் பீடத்துக்குள் வாருங்கள்) என்று வரவேற்றபோது அவர்கள் எங்களைக் கொஞ்சங்கூடக் கண்டு கொள்ளவேயில்லை...அது மட்டுமல்ல அவர்களின் முகத்திலிருந்த அலட்சியமோ அல்லது வேறெதுவோ ஒன்று எங்களைக் கண்டாலே அருவறுப்பது போல் தோன்றியது.

## அடிகளார் அடிப்பொடி

வழிகாட்டுகிறேன் பேர்வழிகள் என்று சொல்லிக்கொண்டு எத்தனையோ பிணந்தின்னிக் கழுகுகள் கூட்டத்திலிருந்து ஏற்பட்ட கசப்பான அனுபவத்தினால் நமக்கும் இப்படியொரு மரியாதைபோலும் என்று நினைத்துக்கொண்டு அவர்கள் செய்த அலட்சியத்தைப் பெரிதுபடுத்திக்கொள்ளாமல், மறுபடியும் இன்முகங்காட்டி அவர்களுக்கு உதவச் சென்றபொழுது, அவர்கள் தங்களுடைய காலணிகளைக் கழற்றி வைப்பதற்கான இடந்தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தார்கள். அங்கேயுள்ள செருப்புக்கடையைக் காண்பிக்க அங்கே வைத்துக் கொள்ளலாம் என்றபோதும் ஒப்புக் கொள்ளவில்லை.

பிறகு நாங்களே அவைகளைப் பாதுகாப்பதற்கு ஒரு தொண்டரைத் தந்து உதவிய பொழுது அவர்களில் ஒருவர் எங்களைப் பார்த்து “Is it Aathi Parasakthi Temple Melmaruvathur?”
என்றார்கள். நாங்கள் அதற்கு ஆம் இதுதான் மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி திருக்கோயிலும், சித்தர் பீடமும் என்றபொழுது, “Thank You, We have only half a minute, our friends are waiting for us in the car and we have to return immediately?” (நன்றி, எங்களுடைய நண்பர்களெல்லாம் அங்கே வண்டியிலேயே அமர்ந்துகொண்டு எங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். நாங்கள் அரை நிமிட நேரத்திற்குள் திரும்பியாக வேண்டும்) என்று மிகவும் அவசரப்பட்டார்கள்.

“We are all from France, we have heard a lot about this temple, that is why we wanted to see it” (நாங்கள் அனைவரும் பிரான்ஸ் நாட்டிலிருந்து வருகின்றோம். இக்கோவிலைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருக்கிறோம். அதனால் அதனைப் பார்க்கும் விருப்பத்தோடு வந்திருக்கிறோம்) என்றவர்கள், நாங்களே எதிர்பாராத வகையில் “Where is your Guruji? Is he in? We wanted to meet him, but our time does not permit. Okay, thank you, we take leave of you” (தங்களுடைய குருபிரான் அவர்கள் எங்கேயிருக்கின்றார்? சித்தர் பீடத்துக்குள் இருக்கிறார்களா..? அவர்களைச் சந்திக்க வேண்டும் என்ற ஆவலுடன் வந்தோம். ஆனால் காலம் எங்களுக்கு அனுமதியளிக்க மறுக்கின்றதே! நல்லது உங்களிடமிருந்து நாங்கள் விடை பெற்றுக் கொள்கின்றோம்) என்றார்கள்.

“Hey! You have come all the way from France, why the hell will time not permit you to do so? If you can’t even spare 5 minutes now, then imagine how tedious it would be for you to do so? If you can’t even spare 5 minutes now, then imagine how tedious it would be for you to get another chance like this next time?” (பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கப்பாலிருக்கும் பிரான்ஸ் நாட்டிலிருந்து இவ்வளவு தூரம் வெகு சிரமப்பட்டு வந்துவிட்டு மேலும் ஐந்து மணித்துளிகள் ஒதுக்குவதற்குக் காலம் உங்களுக்கு அனுமதி கொடுக்க மறுக்கின்றது என்கிறீர்களே.. இனியொரு முறை நீங்களே இங்கே வரவேண்டுமென்றால் மறுபடியும் எவ்வளவு சிரமப்படவேண்டியிருக்கும்) என்று எடுத்துரைத்த பொழுது திடீரென்று பரபரப்பான சில குரல்கள்.

சக்தி நகருங்கள்.. அம்மா வர்றாங்க.. சக்தி நகருங்கள் அம்மா வர்றாங்க, ஒதுங்கி நின்றபொழுது அங்கே ஓம் சக்தி மேடையைச் சுற்றிவிட்டு அதர்வண பத்ரகாளி கோவிலை நோக்கி திரும்ப வந்து எங்களை கடந்து செல்லும் பொழுது தன்னுடைய கடைக்கண் பார்வையினை எங்களோடிருந்த பிரெஞ்ச் நாட்டவர்கள் மீது வீசிச் சென்றார்கள்.

(தொடர்ச்சி...8ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – April 2018



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**
Contact: 02-96420519, 0439686452

**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**
Westmead Public Primary School
Moree Street – Westmead



| | | | |
|---|---|---|---|
| 06.04.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.04.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.04.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.04.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.04.2018 | SUNDAY – ஞாயிறு (Please confirm with mandram officials) | 7.30p.m. – 9.30p.m. | Chithirai Pournami Vilakku Pooja “சித்திரைப்பௌர்ணமி விளக்குப் பூஜை” |

## எந்நாட்டவர்க்கும்...

வந்தவர்களோ அம்மாவினால் ஈர்க்கப்பட்டு அதுவரை உள்ளே வர நேரமில்லை என்று அடம் பிடித்தவர்கள், “நாங்கள் உள்ளே வருகிறோம், ஆனால் ஐந்து நிமிட நேரத்துக்குள் திரும்பி விடுவோம், அது சரி, இப்பொழுது எங்களைப் பார்த்துச் சென்றார்களே..! இவர்கள்தான் உங்களுடைய குரு அவர்களா..? அப்படியானால் இவர்கள்தான் அருள்திரு அடிகளார் அவர்களா..?”

நான்கு கால் மண்டபத்தின் வழியாக நேராக அவர்களைக் கருவறைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு கருவறைக்குள் அகில உலகினையும், எந்த நாட்டவரையும் எம் மதத்தினரையும் பாகுபாடின்றிப் பாவித்து இரட்சிக்கும் உலக மாதாவாகிய நம் அன்னையின் முன் அவர்களை நிற்க வைத்து தீப ஆராதனை செய்து பிரசாதம் கொடுத்தார்கள். கருவறைக்குச் செல்லும் முன்பு, வரையிருந்த படபடப்பு தற்போது அவர்கள் முகத்தில் இல்லை. மிகவும் சாந்தமாக அவர்கள் கருவறையைவிட்டு வெளியே வந்து நாலுகால் மண்டபத்திற்கு அருகே வந்த பொழுது வெகு கோபமாக ஒரு அம்மையார் அவ்வெளிநாட்டுக்காரர்களை நோக்கி வந்து ஆங்கிலத்தில் பொரிந்து தள்ளினார்.

“உங்களுக்காக அங்கே அத்தனை பேர் காத்துக்கொண்டிருக்கின்றார்கள். நீங்கள் இங்கே இன்னும் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? தற்போது உடனடியாக எங்களோடு வரப்போகின்றீர்களா..? அல்லது நாங்கள் உங்களை விட்டுப் புறப்பட்டுப்போகவா..?” என்று இடி இடிப்பதுபோல் முழங்கியதும் அந்த பிரெஞ்ச் அன்பர்கள் கொஞ்சமும் பதற்றமடையாமல், “ஒருவரை அனுப்பி எங்களுடைய பெட்டி படுக்கைகளை இறக்கி வைத்துக்கொள்கிறோம். நீங்கள் எங்களுக்காக மேலும் சிரமப்பட வேண்டாம். நீங்கள் விரும்பினால் உங்கள் பயணத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளுங்கள்”- என்று கூறிவிட்டுச் சித்தர் பீடத்தை வலம் வர ஆரம்பித்துவிட்டார்கள். கோபமாகப் பேசிய அந்த அம்மணியோ சிலைபோல் நின்றுவிட்டார்கள்.

வெளிநாட்டுக்காரர்களை உபசரிப்பதில் எங்களோடு மலேசிய நாட்டைச் சார்ந்த டாக்டர் திரு.கந்தையா அவர்களின் துணைவியாரும் சேர்ந்து கொண்டார்கள். நாங்கள் அனைவரும் இருபுறம் கரைபோல் கட்டியிருக்கும் மக்கள் வெள்ளத்துக்கு நடுவே இராஜபாட்டையில் செல்வதுபோல் அன்னையின் அருள் கூடத்திற்குள் நுழைந்தோம்.

அங்கே ஆன்மிக சிம்மானத்தின்மீது அன்னையாய், அரசாட்சி செய்பவராக அருள்திரு அம்மா அவர்கள் வீற்றிருந்தார்கள். நாங்களிருவரும் விழுந்து வணங்கினோம். அவ்வெளிநாட்டவர்களைப் பார்த்து, அமமா, இவர்களெல்லாம் ‘பிரான்ஸ்’நாட்டவர்கள். அம்மாவைப்பற்றிக் கேள்விப்பட்டு வந்திருக்கிறார்கள் - என்று கூறியபொழுது நாங்கள் சற்றும் எதிர்பாரா வண்ணம் அருள்திரு அம்மா அவர்கள் பிரெஞ்ச்சுகாரர்களைப் பார்த்து “Your God, our God, there is no difference. There is only one God and we all are one People, No Caste, No Religion, our Blood, your Blood. Everybody’s Blood is Red” (நீங்கள் வழிபடுகின்ற கடவுளும் நாங்கள் வழிபடுகின்ற கடவுளும் ஒன்றுதான், கடவுளுக்குள் பேதமில்லை. இவ்வுலகில் கடவுள் ஒருவரே. நாமனைவரும் அவரின் ஒரே மக்கள், நமக்குள் ஜாதி பேதமில்லை. மதபேதமில்லை. உங்களுடைய இரத்தமும் நம் ஒவ்வொருவருடைய இரத்தத்தின் நிறமும் சிவப்புத்தானே) என்றார்கள்.

(தொடர்ச்சி...9ஆம் பக்கம்)

## எந்நாட்டவர்க்கும்...

அம்மாவின் ஆங்கிலப்பேச்சினை அவர்களோடு, நாங்களும் சேர்ந்து கேட்டு அதிசயித்துக்கொண்டிருந்த வேளையில் அம்மா அவர்கள் வந்தவர்களில் ஒருவரின் கையை நீட்டச் சொல்லித் தனது ஆள்காட்டி விரலால் வந்தவர்தம் உள்ளங்கையில் லேசாகத் தொட்டார்கள்.

அவ்வெளிநாட்டுக்காரரின் உள்ளங்கையில் அம்மா அவர்கள் தொட்ட இடத்திலிருந்து குங்குமம் வந்துகொண்டேயிருந்தது. விளக்கம் தெரியாமல் அவர்கள் வாயடைத்து நின்று கொண்டிருந்தபொழுது அம்மாவின் விளையாட்டுத் தொடர்ந்தது.

அவ்வெளிநாட்டுக்காரரின் கையை நீட்டச்சொல்லித் தன் விரல்களால் அவரின் உள்ளங்கைப் புறத்தின் மையம், நடுவிரல், கட்டை விரலின் அடிப்பகுதியில் உள்ள மேட்டுப்பகுதி அடிப்பகுதி, கட்டைவிரலின் அடிப்புறமுள்ள மேட்டுப்பகுதிஆகியனவற்றைத் தமது ஆட்காட்டி விரலினால் தொட்டுவிட்டு முன்போலவே கையொடு கை இணைத்து மும்முறை தடவிவிட்டு மறுபடியும் முகர்ந்து பார்க்கச் சொன்னார்கள்.

முகந்து பார்த்த அந்த அன்பர் மயங்கிக் கீழெ விழாததுதான் பாக்கி, அடுத்து அவரிடமிருந்து ஆனந்தக்கூச்சலானது, "Oh! What a wonderful miracle? It is an entirely different and marvelous smell! How is this possible..?" (ஆஹா என்ன ஆச்சரியமான அற்புதம் இது? இப்பொழுது கமிழ்வது முன்போலில்லாத முற்றிலும் வேறான நறுமணம் அல்லவா? நொடிப்பொழுதில் இதுபோன்று எப்படி நடக்க முடியும்..?) என்று பிரமித்தபடிக் கூறினார்.

அவர்களையெல்லாம் அருள்கூடத்தில் வரவேற்பறையிலிருந்து அடுத்துள்ள கூடத்திற்குள் (Hall) அழைத்துச் சென்று அதையொட்டி அடுத்தமைந்திருந்த அன்னையினுடைய அலுவலறைக்குச் சென்று பாருங்கள் என்று அவ்வெளிநாட்டுக்காரர்களையும் எங்களையும் அனுப்பி வைத்தார்கள். உள்ளே சென்ற அவர்கள் மேலே இருந்த அம்மன், அடிகளார், சுயம்பு உள்ள கருவறைக்கோல சிலையைப் பார்த்துக்கொண்டிருக்க அச்சிலை அவர்கள் கண் முன்னாலேயே சால்வை தரித்துக்கொண்டு, முகத்தில் சாந்தமும், தாடியும், இருதயத்தில் ஒரு சிவப்பு வட்டமும் அதனுள் ஒரு அடையாளக் குறியும், வலது கையில் அபய முத்திரையும் தாங்கிய இயேசு பெருமானின் திருக்கோலம் (Sacred heart of Jesus) கொண்ட சிலை வடிவமாக மாறியது. தங்களை மெய்மறந்த நிலையில் அவர் ('O'Jesus!) என்று உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து அழைத்தார்கள். மறுபடியும் அவர்களைக் கூடத்திற்குள் அழைத்து அருள்திரு அம்மா அவர்கள் தமது புனிதக் கரங்களினாலேயே அங்குள்ள மிகப் புனிதமான தனது பூஜை அறையினுள் சென்று பிரார்த்தனை செய்து வருமாறு அவர்களுக்குப் பொன்னானதோர் வாய்ப்பினை நல்கினார்கள். பூஜையறையிலிருந்து திரும்பியவர்களை அங்கேயே நிறுத்தி வைத்துக்கொண்டு அம்மா தன் திருவிளையாடல்களை மேலும் தொடர்ந்தார்கள்.

பூஜையறையின் நிலைக்கு இருபுறமும் பக்கத்திற்கொன்றாக இரு பூந்தொட்கள் வைக்கப்பட்டிருந்தன. அவைகளை அவர்களுக்குக் காட்டி அது என்ன? என்று அம்மா அவர்கள் வினவ, அதைத் தொட்டுப்பார்த்த அவர்கள் பதிலிறுத்தது, (Artificial Plant) (செயற்கைச்செடி, இயற்கையானது அல்ல) (and Artificial Flowers) (செயற்கையான வண்ண வண்ணப்பூக்கள்) என்பதாகும்.

உடனே அம்மா அவர்கள் அந்த வெளிநாட்டுக்கார அன்பரை அழைத்து, அந்தச் செயற்கைச் செடியின் ஒரு கிளையைப் பிடித்து உலுக்கச் சொன்னார்கள். அவ்வாறே அவர்கள் செய்யச் செய்ய அந்தச் செடியினின்றும் பூக்களாக உதிர்ந்துகொண்டேயிருந்தன. அவ்வாறு உதிர்ந்தவைகள் எல்லாம் அச்செயற்கைச் செடியிலிருந்த செயற்கைப் பூவினைப் போன்ற.. ஆனால் மணம் வீசும் இயற்கையான மலர்களாகும்.

அம்மா அவர்கள் அதே அன்பரைப் பார்த்து மற்றொரு செயற்கைச் செடியினையும் உலுக்கச் சொன்னார்கள். அப்பொழுது அந்த அன்பர் முன்போல உடனே உலுக்காமல் அச்செடியின் ஒவ்வொரு கிளையையும், இலைகளையும் பிரித்துப் பிரித்து உள்ள ஏதேனும் வண்ண மலர்கள் ஒளித்து வைக்கப்பட்டிருக்குமா எனச் சந்தேகம் கொண்டதனால் தேடிப் பார்த்தார்கள்.

அவர்களைப் பார்த்து என்ன? உள்ளே ஒன்றும் ஒளித்து வைக்கப்படவில்லையே! என்று சிரிப்புடன் கேட்டுவிட்டு மறுபடியும் உலுக்குமாறு பணித்தார்கள். அந்த அன்பர் உலுக்க உலுக்க அச்செடியிலுள்ள செயற்கை மலர்களைப் போலவே இயற்கையான வண்ண மலர் இதழ்கள் உதிர்ந்துகொண்டே இருந்தன. வந்தவர்களுக்குப் பேச்சே எழவில்லை. அம்மா அவர்கள் அந்த இரண்டாவது செடியினை, மறுபடியும் உலுக்கச் சொல்ல அவர்களும் அதேபோல் செய்யச் செய்ய இம்முறை வந்தவைகள் வண்ண மலர்கள்.

வந்தவர்களின் கண்கள் அதிசயத்தால் விரிந்து நின்றன. அப்பொழுது அம்மா அவர்கள் சின்முத்திரை கோலம் கொண்டு அருள்வாக்கு மழையைப் பொழிய ஆரம்பித்தார்கள்.


"காற்றைப் பார், நீரைப்பார், தீயைப்பார், வானைப்பார், அவைகள் எங்கும் பரந்து கிடந்தாலும் எல்லா இடத்திலும் தத்தமது தொழிலைத்தாமே செய்து வருகின்றன. இங்குள்ள கடல் நீரும் உப்பு! அங்குள்ள கடல்நீரும் உப்பு! இங்குள்ள குடிநீரும் தாகத்தைத் தணிக்கிறது, அங்குள்ள குடிநீரம் தாகத்தைத் தணிக்கிறது. இயற்கையின் குணங்களை அறிந்துகொண்டு மனிதன் அதனுடன் ஒத்துவாழ்ந்தால் நன்மை பெறலாம்.

(தொடர்ச்சி..10ஆம் பக்கம்)

# Sydney - Mandrams - Upcoming Events – April 2018



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317



**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140

| | | | |
|---|---|---|---|
| 06.04.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.04.2018 | FRIDAY– வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.04.2018 | FRIDAY– வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.04.2018 | FRIDAY– வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

## எந்நாட்டவர்க்கும்...

விலங்குகளைப் பார்: அதனுடைய குணங்களை அறிந்து கொண்டுவிட்டால் அவற்றால் நமக்குத் தீங்கேதும் கிடையாது. இங்குள்ள விலங்குக்கும் உலகின் மறுகோடியில் உள்ள அதே விலங்கிற்கும் குணத்தில் பேதமிருக்கிறதா..?

ஆனால் மனிதனில்தான் எத்தனை வகை? எத்தனை நிறம் எத்தனை குணம்..? நமக்குள் இருக்கின்ற ஆன்மா அது அனைவர்க்கும் ஒன்றுதான். அவர் இந்துவாக இருந்தாலும் சரி, முகம்மதியனாக இருந்தாலும் சரி அல்லது கிறித்துவனாக இருந்தாலும் சரி. ஆன்மாவுக்குள் பேதமில்லை.

நாமெல்லாம் இனத்தால் பேதப்பட்டுக் கொள்கிறோம். மொழியால் பேதப்பட்டுக்கொள்கிறோம். கலாச்சாரத்தால் பேதப்பட்டுக் கொள்கிறோம்.

ஆனால் நாம் 'ஆன்ம உணர்வால்'ஒன்றுபட வேண்டும். அனைவரின் ஆன்மாவும் ஒன்றே என உணரவேண்டும். இன்று உலக உயிர்கள் உய்வடைய வேண்டுமானால் ஆன்மிகம் ஒன்றுதான் அதற்கான வழி, தொண்டு நெறி ஒன்றுதான் சமதர்ம சமுதாயத்திற்கு வழிவகுக்கும். தொண்டு ஒன்றினால்தான் என்னை அடையமுடியும் என்று அன்னை அவர்கள் அமுத மொழிகளை உரைத்துக்கொண்டே போனபொழுது அவர்கள் ஓடி வந்து அன்னையின் திருப்பாதங்ளைப் பற்றிக்கொண்டு மண்டியிட்டு வணங்கினார்கள்.

எழுந்துகொண்ட அவர்கள் விடைபெற்றுக் கொள்ளும் முன்னர் அவர்கள் அனைவரும் அருள்திரு அம்மா அவர்களைப் பார்த்து நமது முறையில் கைகுவித்து வணங்கினார்கள். அப்பொழுது அன்னை அவர்களோ அவர்கள் முறையில் சிலுவைச் சின்னம் காட்டி தனது விரல்களில் தனது இதழ்களால் அவர்களின் கலாச்சாரப்படி முத்தமிட்டு ஆசிர்வதித்து அனுப்பினார்கள்.

அவர்களுக்குப் பிரசாதம் கொடுத்து வழியனுப்பச் சென்றபோதுதான் ஒரு புதிருக்கான விடைகிடைத்தது. பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அந்த வருங்கால செவ்வாடைச் சக்திகளோடு நாங்கள் ஓம் சக்தி மேடையைக் கடந்தபொழுது அங்கு முன்னர் வந்த அதே பெண்மணி முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க போதாக்குறைக்கு எங்களையெல்லாம் சுட்டெரிப்பது போல் பார்த்துக்கொண்டே "Come on! Hurry up!" என்று கூறிக்கொண்டே முன்னே ஓடிச்சென்றார்.

நாங்களும் அவர்களை வழியனுப்பச் சாலை வரை சென்றபொழுது அங்கு வெளிநாட்டு அன்பர்களுக்காகக் காத்துக்கொண்டிருந்தது அவர்களது நணபர்களுடைய சொந்த வாகனமல்ல, அது Tourism Development Corporation க்குச் சொந்தமான சொகுசுப் பேரூந்தாகும். அது பாண்டிச்சேரியை நோக்கிப்போய் கொண்டிருந்தது.

அந்தப் பேரூந்தில் இவர்கள் ஏறும்பொழுதே கேட்டுக் கொண்டதற்கிணங்க, அதனுடைய ஓட்டுநர் மேல்மருவத்தூரில் ஓரிரு நிமிடங்கள் மட்டுமே நிறுத்துவதற்குச் சம்மதித்திருக்கின்றார். அந்த நேரத்திற்குள் அவர்கள் இறங்கி வந்து வெளியிலேயிருந்த சித்தர் பீடத்தைப் பார்த்தவுடனே திரும்பி வந்துவிட வேண்டும் என்பது அவர் போட்ட நிபந்தனை.

(தொடர்ச்சி..11ஆம் பக்கம்)

## Melbourne - Mandrams – Upcoming Events – April 2018





### Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram

Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.

**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 06.04.2018 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 13.04.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 20.04.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 27.04.2018 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 29.04.2018 | SUNDAY – ஞாயிறு | 7.30p.m. – 9.30p.m. | Chithirai Pournami Vilakku Pooja “சித்திரைப்பௌர்ணமி விளக்குப் பூஜை” |

**Lalor**

**Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.**
Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

## எந்நாட்டவர்க்கும்...

ஆனால் நடந்ததென்ன பார்த்தீர்களா? சுமார் ஒன்றேகால் மணி நேரம் கழித்துத்தான் அவர்கள் வர முடிந்தது. அந்த ஐவரும் எங்களுக்கு நன்றி கூறி விட்டுப் பேரூந்தில் ஏறிக்கொண்ட பொழுது உள்ளேயிருந்தவர்கள் ஏன் இவ்வளவு தாமதம்? எனக் கேட்டவுடன் அவர்கள் ‘பிரெஞ்சு’மொழியில் ஏதோ கூறி தமது உள்ளங்கையைக் காட்ட பேரூந்தில் இருந்த அனைவரும் வந்து தொட்டுத் தொட்டுப் பார்த்துக் கண்களில் ஒற்றிக்கொண்டார்கள். அன்னை அவர்கள் இப்படி வலிய வலிய அருள்பாலித்தது பிரெஞ்சு நாட்டுத் தொண்டர்களுக்கு (மற்றுமொரு சமயம் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு அருள்பாலித்தது எப்படித் தெரியுமா? அதுவும் மிகவும் சுவையான நிகழ்ச்சியாகும். அதனையும் இப்பொழுது காண்போம்..)

22.05.1992 வெள்ளிக்கிழமையன்று இராஜபாளையத்தின் நகர்நல வேள்வியினை முடித்து வைத்துக் கொடுத்துவிட்டு அங்குள்ளோருக்கும் பலருக்கும் வரும் வழியில் அருள்பாலித்துவிட்டு அன்று மாலை மதுரையம்பதியை வந்தடைந்தார்கள். அடுத்தநாள் 23.05.1992 சனிக்கிழமையன்று அம்மா அவர்கள் மதுரை மாநகரில் பல மன்றங்களுக்கும் சென்று எழுச்சியூட்டி அங்கிருப்பவர்களுக்கெல்லாம் அருள் பாலித்தார்கள். அன்றைய தினம் மதுரை மாவட்டத் தொண்டர்களுக்கெல்லாம் அவர்கள் வாழ்க்கையில் ஒரு பொன்னான நாளாகும். ஆம் அன்று இரவுதான் அருள்திரு அம்மா அவர்கள் மதுரைப் பல்கலைக்கழக விருந்தினர் மாளிகை வளாகத்திலுள்ள புல்தரையில் அமர்ந்து கொண்டு அத்தனை தொண்டர்களோடு அளவளாவி அருளுரையாற்றினார்கள். அதுபற்றி ஏற்கனவே சக்தி ஒளியில் விவரமாக வந்திருக்கிறது.

அதில் மறக்க முடியாத அனுபவம் என்னவென்றால் அது அம்மா அவர்கள் செய்து காட்டிய உலகப் பொதுமொழியான மௌன மொழிதான். அம்மா அவர்கள் சைகையாலேயே ஒவ்வொன்றாகக் கேட்கக் கேட்க அமர்ந்திருந்த தொண்டர்களெல்லாம் சரியான பதிலைக் கூறிக்கொண்டிருந்தனர். அப்போது அம்மா அவர்கள் இதே போல் ஒவ்வொருவருடைய எண்ண ஓட்டங்களையும் தெரிந்து கொள்ள ஆரம்பித்துவிட்டால் அப்புறம் மொழிபேதம் என்பது கிடையாது என்று கூறிச் செய்த முத்திரைகள், ஒருவேளை ‘Telepathy’ என்று சொல்கிறார்களே ‘முக்கால திருஷ்டி’ என்றெல்லாம் சொல்லுகிறார்களே, அதற்கான பாலபாடமாக இருக்குமோ, என்று ஒரு தொண்டருக்குத் தோன்றியது. அம்மாவின் போதனையில் ஆரம்பப் பாலபாடத்தின் தகுதியே ‘Telepathy’ போன்றிருக்குமானால் இனி முதுநிலைத் தகுதிப் பாடங்கள் எப்படியிருக்கும் என்று ஓரளவாவது ஊகிக்க முடிகின்றது.

மறுநாள் 24.05.1992 ஞாயிற்றுக்கிழமை மதுரையிலிருந்து புறப்பட்டு, செல்லும் வழியெல்லாம் மன்றங்கட்கும், மக்கட் கூட்டத்தினர்க்கும் அருள்பாலித்துவிட்டு அம்மா அவர்கள், கம்பம் மன்றங்களுக்கும் அருள்பாலித்துவிட்டு அன்று இரவு கம்பம் நகரில் தங்கியருளினார்கள்.

(தொடர்ச்சி..12ஆம் பக்கம்)

## எந்நாட்டவர்க்கும்...

கம்பம் பகுதியில் அம்மா அவர்கள் கொலுவிருந்த அந்த மூன்று நாட்களிலும் கம்பம் டி.கே.எஸ். குடும்பத்தினரின் விருந்தோம்பல் அம்மாவின் போதனைகளுக்கு ஒரு எடுத்துக்காட்டு என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனெனில் உணவு தயாராவது தமிழக எல்லையில்! தொண்டர்கள் சென்றுள்ளதோ கேரள மாநிலத்திற்குள், மாநிலம் விட்டு மாநிலமானாலும் வேளாவேளைக்கு இருக்குமிடம் தேடி வந்து வகைவகையான சுவையுடன் அன்பையும் கலந்து அவர்கள் உபசரித்த உபசரிப்பு இருக்கின்றதே..! அதனை அம்மா அவர்கள்தான் அவர்கள் உணர்விலேயே கலந்திருக்கச் செய்திருக்க வேண்டும். அம்மா அவர்கள் அவர்களுக்குக் கற்றுக் கொடுத்ததை நாம் ஒவ்வொருவரும் அவர்களைப் பார்த்துக் கற்றுக் கெள்ள வேண்டும்.

அன்று 25.05.1992 திங்கட்கிழமை தேக்கடியில் ஆனந்தமான மாலைப்பொழுது! வழக்கம்போல் வந்த தொண்டர்களையெல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டு வாருங்கள் நான் இங்கேயே இருந்துகொள்கிறன் என்று அம்மா அவர்கள் தங்குமிடத்திலேயே இருந்துகொண்டார்கள். சற்றுநேரம் கழித்து அங்கு அன்னையைத் தரிசிக்க வேண்டும் அன்னையின் அருளுரைகளையெல்லாம் கேட்கவேண்டும் என்ற வேட்கையுடன் கேரள மாநிலத்தைச் சேர்ந்த பல பிரமுகர்களும், பக்தர்களும் கூடிக் காத்திருந்தார்கள்.

சென்னை மாவட்ட ஆன்மிக இளைஞர் அணித் தலைவரோடு கேரள மாநிலத்திலிருந்து வெளியாகும் இரண்டு பிரபல பத்திரிகைகளின் நிருபர்களும் வந்திருந்தார்கள். அவர்களிருவரும் அடிகளார் அவர்கள் எங்களையும் அழைப்பார்களா..? நாங்களும் தரிசிக்க முடியுமா..? என சென்னை மாவட்ட இளைஞரணித் தலைவரிடம் கேட்டபொழுது அவர் கூறியது, உங்களுக்கு அருள் கொடுக்க வேண்டும் என்று அம்மா நினைத்தால், அதற்குரிய பக்தனாக நீயிருந்தால், அம்மாவே அழைப்பார்கள் அப்பொழுது தரிசனமும் கிடைக்கும், என்பதுதான்.

அவர்களது நம்பிக்கை வீண் போகவில்லை. அவர்கள் அம்மாவால் அழைக்கப்பட்டார்கள். உள்ளே நுழைந்த இருவரும் அன்னையை வணங்கிக் கேட்ட கேள்வி, நடப்பு அரசியலுக்கு உங்களது (ஆன்மிக குருவின்) ‘Prediction’ (முன்கூட்டியே சொல்லுதல்) என்ன? இன்று உலகெங்கும் நடக்கின்ற கலவரங்களும் மற்றவைகளும் எதில் போய் முடியும்? என்பது.

அதற்கு அம்மா அவர்கள் கூறிய பதில் சூட்சுமமானது, ’நாளை நீ இறந்துவிடுவாய்’ என்று எனக்குத் தெரிகின்றது. நானும் இவ்வாறு உனக்கு முன்கூட்டியே சொல்லிவிடுகிறேன் (Prediction) நீயும் இறந்து விட்டால் பிறகு என்ன ஆகும்..? நானே உன்னைக் கொன்றுவிட்டதாக உன் நண்பர் கூறுவாரா? மாட்டாரா? உலகெங்கும் நடப்பது தெரியும். ஆனால் அதை உனக்கு நான் சொல்ல மாட்டேன். என் பக்தனுக்குத்தான் சொல்வேன். என் பக்தன் என்பதற்காக எல்லோரிடமும் கூறிவிட மாட்டேன். நான் கொடுக்கும் ‘லட்டை’(இனிப்பை) எவன் பத்திரமாக வைத்துக்கொள்வான் எனத் தெரிந்து அவனுக்குத்தான் சொல்வேன். “நீயும் இப்பொழுதுள்ள உன் மனநிலையை மாற்றிக்கொண்டு என் பக்தனுடைய மனநிலையில் வந்தால் அதை உனக்கும் சொல்வேன்”என்றார்கள்.

ஒரு வேடிக்கை என்னவென்றால் வந்தவர்கள் இருவரில் ஒருவர் நம்பிக்கையுள்ளவர். மற்றவர் நம்பிக்கையில்லாதவர். அவர்கள் கேட்ட மற்றொரு கேள்வி அதிமுக்கியமானதாகும். அதாவது, நீங்கள்தான் (அடிகளார் அவர்கள்தான்) கடவுள் என்று பக்தர்கள் கூறுகின்றார்களே! அதை நாங்கள் எப்படி நம்புவது..?”என்றதோர் நேரிடையான கேள்வியாகும்.

உடனே அம்மா அவர்களோ, நான் ஒரு சாதாரண வாத்தியார் சார், என்று கூறிப்புன்னகை பூத்தவாறே தன்னிடம் கேள்வி கேட்டவரை அழைத்து அவர்தம் நாக்கை நீட்டச் சொல்லித் தமது வலது கையின் ஆட்காட்டி விரலால் அவர்தம் நாக்கை தொட்டு எப்படி இருக்கின்றது..? எனக் கேட்டதும் அவர் மிகவும் வியந்து ரொம்பவும் இனிப்பாக இருக்கின்றது..? என்றார். பிறகு அதேபோல் மற்றவர் நாக்கிலும் தொட்டபொழுது அவருக்கு ஒரு சுவையும், மாற்றமும் இல்லை. அவருக்கு மனதிலே ஒரு ஏமாற்றம், அடடா.. நமக்கும் இப்படியொரு அனுபவம் கிடைக்கவில்லையே, என்ற ஏக்கம் மனதைக் கவ்வியதுபோல் அவர்தம் முகம் காட்டியது.

மறுமுறையும் அம்மா அவர்கள் அந்த இரண்டாம் நபரை அழைத்து மறுபடியும் தன் ஆட்காட்டி விரலினால் அவர்தம் நாவினில் தொட்டபொழுது அந்நிருபரின் கண்களில் ஆச்சரியம், அவருக்கும் அந்தத் தேமதுரச் சுவை கிட்டியிருக்கின்றது. அவரைப் பார்த்து அம்மா அவர்கள், அதே கை, அதே நாக்கு முன்னே தித்திப்பில்லை. இப்பொழுது எப்படி இனிப்பு வந்தது? உன் மனதில் ஏக்கம் வந்தது, அதனால் நம்ப நினைத்தாய், நம்பிக்கை வந்ததால் இனிப்பு, இல்லையேல் நானும் சாதாரண மனிதன் போலத்தான். நீ என்னை நம்பிக் கடவுள் என்றால் நான் கடவுள், கடவுள் இல்லையென்றால் இல்லை, நான் மிகவும் டாம்பீகமாக கிரீடம் எல்லாம் வைத்திருப்பேன் என்று நினைக்காதீர்கள், என்னை இவ்வளவு சிம்பிளானவன் (Simple) என்று தெரிந்து கொண்ட பிறகு வியக்கின்றீர்கள், களிமண்ணால் செய்த பிள்ளையாரைப் பார்த்து அது பிள்ளையார் என்று வணங்கினால் பிள்ளையார்தான், இல்லையென்றால் வெறுங்களிமண் என்றால் களிமண்தான் என்று அவர்களை ஆசிர்வதித்து அனுப்பினார்கள்.

அன்றைய இரவு விடிந்தபொழுது திங்கட்கிழமை 2.05.199 அன்றைய காலைக் கதிரவன் தன் பொற்கிரணங்களை நீட்டி அன்னையை வரவேற்க ஆவலோடு ஓடி வந்துவிட்டது. அந்த வனவிலங்கு சரணாலயத்தைச் சுற்றிப்பாத்துவிட்டு அனைத்துத் தொண்டர்களும் தேக்கடி ஏரியும் பெரியாறு அணைக்கட்டின் பரந்து விரிந்த நீர்த்தேக்கத்தின் படகுத்துறையின் முன்னர் குழுமியிருந்தனர்.

(தொடர்ச்சி…13ஆம் பக்கம்)

## எந்நாட்டவர்க்கும்...

அவர்கள் அனைவரின் முகத்திலும் அந்தக் கூத்தாட்டம். அவர்கள் அனைவரின் கண்களும் ஒரு முறை படகுத்துறையில் நங்கூரமிடப்பட்டிருந்த இரண்டு பெரிய படகுகளின் மீதும் மறுமுறை எதிரே தெரிந்த மலைப்பாதையையும் பார்த்த வண்ணமிருந்தது. ஒரு படகு ஏறத்தாழ ஒரு சிறிய கப்பலைப் போன்ற அளவில் இரண்டு தளங்களைக் கொண்டதாயிருந்தது. மற்றொன்று அதே அளவில் ஒரு தளத்தினைக் கொண்டதாயிருந்தது.

ஆம், அவ்விரண்டு படகுகளும் அன்னை தன் தொண்டர் குழாத்தோடு படகுச்சவாரி செய்வதற்காகத் தயார் நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுதான் அத்தொண்டர்களின் குதூகலத்திற்குக் காரணம். அன்றையதினம் அம்மலை வாசஸ்தலத்தின் ஜில்லென்ற பனிக்காற்றின் குளிருக்கு இதமாகத்தானிருந்தது, காலைக் கதிரவனின் ஒளிக்கதிர்கள்!

அந்த ரம்மியமான சூழ்நிலையில் அனைவரும் மெய்மறந்திருந்த நேரம், அனைத்துத் தொண்டர்களின் மனங்களும் ஒன்றை மட்டும் மறக்காமல் நன்றிப் பெருக்கோடு நினைத்துக்கொண்டிருந்தது. அருள்திரு அம்மா அவர்களின் கடைக்கண் பார்வையருளினால்தானே நமக்கு இப்பேர்ப்பட்ட ஒரு 'ராஜவாழ்வு' கிடைத்துக்கொண்டிருக்கிறது – என்பதுதான் அது.

அப்பொழுது அங்கே ஒரு கும்பல் வந்திறங்கியது, என்ன அது..? பட்டு வண்ணச் சிட்டுகளின் கூட்டமா என்ன? அத்தனை பேரும் வெள்ளை வண்ண உடையில்.. அவர்கள் அனைவரும் வெளிநாட்டவர்கள். அங்கே வந்தவர்கள் நமது தொண்டர்களைப் பார்த்து ஆவலாக யாருக்காகக் காத்துக்கொண்டிருக்கிறீர்கள்..? என நம்மிடம் வினவினார்கள்.

வந்தவர்கள் இத்தாலி நாட்டைச் சேர்ந்தவர்கள், அவர்களிடம் நமது தொண்டர்கள் நமது அம்மாவைப் பற்றியும், அவர்தம் பணிகளை பற்றியும், மருவூரின் மகிமை பற்றியும், அன்னைதான் கடவுளரின் கடவுளாகிய ஆதிபராசக்தி என்பது பற்றியும் தெளிவாக விளக்கிக் கொண்டிருந்தார்கள். அவர்களும் ஆவலோடு கேட்டுக்கொண்டிருந்தார்கள். அம்மா வருகைக்காகக் காத்துக்கொண்டிருப்பதில் அவர்களும் எங்களோடு சேர்ந்துகொண்டார்கள்.

அப்பொழுது நாங்கள் அவர்களைப் பார்த்து, எங்களுடைய உடன் பிறவா அன்புச் சகோதரர்களே! சகோதரிகளே! நீங்கள் உங்கள் மதத்தின்பால் கொண்டுள்ள பற்றுதலையும், உங்கள் கடவுள்பால் கொணடுள்ள பற்றுதலையும், உங்கள் கடவுள்பால் கொண்டுள்ள நம்பிக்கையின் ஆழத்தினையும் அறிந்து கொண்டு சொல்கிறோம். நீங்கள் உங்கள் கடவுளைக் கண்டதுண்டா? உங்களுடைய அருமையான போதர்களாகிய யோசப்பும், பீட்டரும், பவுதலும் போல உங்களுடைய கடவுளுடன் அளவளாவியதுண்டா..? என்று கேட்டபொழுது அவர்கள், 'மெய்யாகவே இல்லை' என்று பதிலுரைத்தார்கள்.

அப்பொழுது நாங்கள், "அன்புச் சகோதரர்களே! கொஞ்சம்கூட வஞ்சகமில்லாமல் கூறுகின்றதை நம்புங்கள். நீங்கள் இதுவரை காணாத உங்களுடைய கடவுள்தான் இன்று இங்கே அம்மாவாக அவதரித்து வந்திருக்கின்றது. உங்களுடைய பாவத்தைப் போக்கச் செய்கின்ற கடவுள்தான் இன்னும் சற்று நேரத்தில் இங்கே விஜயம் புரிய இருக்கின்றது. இந்த மகத்தான வாய்ப்பை நழுவ விடாதீர்கள், நம்மனைவரின் கடவுளும், பரம்பொருளுமாகிய அன்னையின் தரிசனம் இன்னும் சற்று நேரத்தில் நமக்குக் கிடைக்க விருக்கின்றது"என்று நாங்கள் கூறிக்கொண்டிருக்கும்பொழுதே அங்கே அம்மா அவர்கள் மின்னலென வந்திறங்கினார்கள்.

(தொடர்ச்சி..14ஆம் பக்கம்)

புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
ஆதிபராசக்தி இணையத்தளம்
www.adhiparasakthi.co.uk

"ஜோதி" ஆன்மிகச் செய்திச் சுடரை
www.adhiparasakthi.co.uk என்ற
இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

## எந்நாட்டவர்க்கும்...

நாங்கள் கொஞ்சம்கூட எதிர்பாரா வண்ணம் இத்தாலி நாட்டினரான அவர்கள் அனைவரும் நமது அம்மாவைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் கண்களில்தான் எவ்வளவு ஆர்வம்! அனைவரும் அவசர அவசரமாகப் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் காலணிகளைக் கழற்றி வைத்துவிட்டு அன்னையைச் சூழ்ந்து நமது முறையில் வணங்கி மண்டியிட்டார்கள். அன்னையவர்களோ தனது வலக்கரத்தினால் தனது வலது மார்பு, இடது மார்பு, நெற்றி ஆகிய இடங்களைத் தொட்டு கடைசியில் தம் இதழ்களின் மீது விரல்களை வைத்து முத்தமிட்டு அவர்கள் முறையில் ஆசீர்வதித்தார்கள்.

அவர்கள் அனைவரும் அம்மாவுடன் நின்று கொண்டு, மறுபடியும் மண்டியிட்டு வணங்கியபொழுது பட்டப்பகலில், ஏரிக்கரையில் சுகந்தமான மெல்லிய பூங்காற்று வீசிக்கொண்டிருந்த வேளையில் யாருமே எதிர்பாராவண்ணம் “சிலுவையில் இயேசுபிரான்” இருப்பது போன்று காட்சி கொடுத்தார்கள். ஒருகணம் அவரவர்கள், அவ்வெளிநாட்டினர் உட்பட தங்களது கண்களையே நம்பமுடியவில்லை. அவர்கள் ஆர்வம் மேலிட ‘ஓ ஜீசஸ்’ என பரவசத்தோடு கூற, அம்மா அவர்கள் அவர்களுக்கு ஆசி வழங்கினார்கள். ஓரிரு நிமிடம் கழித்து மறுபடியும் அத்தெய்வீகக் காட்சி கிடைத்தது. அந்த அன்பர்கள் அகமிக மகிழ்ந்து சென்றார்கள்.

பிறகு அம்மா அவர்களோடு அத்தனை பேரையும் ஏற்றிக்கொண்டு படகு உலா ஆரம்பமாகியது. ஆழம் அதிகமான ஆனால் அமைதியான நீர்நிலையின் மீது மிதந்து கொண்டே சென்ற அப்படகு எங்களை இன்பபுரிக்கே அழைத்துச் சென்றது. அணைக்கட்டின் ஓரங்களில் இயற்கையான எழில் கொஞ்சும் காடுகள், ஆங்காங்கே வன விலங்குகளின் களிநடனம், கூட்டமாக வந்து நின்ற யானைகள், அவைகள் அத்தனையும் துதிக்கையை மேலே தூக்கி ‘அம்மா’என அழைத்து அன்னையை வணங்கிய அற்புதம் காட்டெருமைகளின் கூட்டம், வண்ண வண்ணப் பறவைகளின் மாயாஜாலங்கள், ஆமைக் கூட்டங்களின் அணிவகுப்பு, பாம்புப் பறவைகளின் மாயாஜாலங்கள் இவற்றினூடே சுமார் 3 மணி நேரங்களுக்கு அந்தப்பயணம் தொடர்ந்தது.

இடையில் பெரியாறு அணைக்கட்டின் மதகுகளுக்கருகே அன்னை தானே தன்கரங்களினால் திடீரென்று செய்த அற்புதபூஜை.. ஓகோ! அதற்காகத் தான் அன்னையின் பயணமே போலிருக்கிறது! பின்னர் அன்னைக்குத் திருஷ்டி எடுக்கப்பட்டது.

அன்னையின் திருப்பாதங்கள் பட்டவுடன் நிரம்பி வழியத் துவங்கிய அணையானது இன்றுவரை அதாவது ஐந்து மாதங்களுக்கு மேலாகியும் நிரம்பிய நிலையிலேயே உள்ளது. ஏறத்தாழப் பல ஆண்டு இடைவெளிக்குப் பின்னர் இவ்வாண்டுதான் ஜூன் மாதமே கம்பம் பள்ளத்தாக்கிற்குப் பெரியாறு அணைக்கட்டிலிருந்து நீர்விடப்பட்டிருக்கின்றது என்பதனை அதிகாரபூர்வமாகத் தெரிந்துகொண்ட பொழுது நாமடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை என்பது சொல்லித் தெரியவேண்டுமா என்ன..?

வெளிநாட்டுக்காரர்களுக்கு அன்னை நல்கிய இவ்விரு காட்சிகளைப் பற்றி அமெரிக்க நாட்டைச் சேர்ந்த ஒரு அன்பரிடம் கூறியபொழுது அவர் கூறியது. **“இறுதி ஆண்டவராகப் (Sacred heart of Jesus) பிரெஞ்சுக்காரர்களுக்கும் சிலுவையிலறையப்பட்ட ஏசுவாக இத்தாலியர்களுக்கும் அம்மா காட்சி கொடுத்திருக்கிறார்களே! இவர்களும் கிறித்துவர்களே. அவர்களும் கிறித்துவர்களே ஆனாலும் அவரவர் விருப்பத்திற்கேற்ப அம்மா அவர்கள் காட்சி கொடுத்திருக்கிறார்கள், என்றால்.. இந்தியருக்கு மட்டுமல்ல, மலேசிய மக்களுக்கு மட்டுமல்ல.. பிரெஞ்சு இத்தாலியருக்கு மட்டுமல்ல.. அகில உலகத்ததவர்களுக்கும் தாயானவள் நானே என்பதனை அம்மா அவர்கள் உலகுக்கு உணர்த்தும் காலம் ஆரம்பமாகிவிட்டது போலிருக்கிறது” என்றார் உணர்ச்சித்ததும்ப.**

மகனே! எந்நாடும் எனது நாடு..!
எம்மக்களும் எனது மக்கள்..!
எம்மதமும் என் மதமே!
எல்லோரும் என் வயிற்றுப் பிள்ளைகள்!
ஒரே தாய்! ஒரே குலம்..!
நாளைய உலகம் அருள் உலகம்..!
நாளைய ஆட்சி அருளாட்சி..!

-என்ற தாரக மந்திரம் தரணியெல்லாம் ஒலிக்கத் துவங்கிவிட்டது தெரிகின்றது.

●●

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**பங்குனி - அமாவாசை–பௌர்ணமி:**
தரும சிந்தனையை உண்டுபண்ணும்.
உலகில் எங்கும் சமாதானமும், செழிப்பும், தர்ம நெறிகளும் தழைத்து உலக நலம் உண்டாகும்.

**சித்திரை – அமாவாசை–பௌர்ணமி :**
தானியம் உண்டாகும்.
தானியங்கள் மிகுதியாக விளையும்.

குருவடி சரணம்! திருவடி சரணம்!!

ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!



## ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்

### ஆலய சிறப்பு விழாக்கள்

### 2018 - விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| **சித்திரை** | **01** | **14.04.2018** | **சனி** | **தமிழ்ப் புத்தாண்டு** |
| சித்திரை | 02 | 15.04.2018 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| சித்திரை | 16 | 29.04.2018 | ஞாயிறு | சித்திரைப்பௌர்ணமி – வேள்வி பெருவிழா |
| வைகாசி | 01 | 15.05.2018 | செவ்வாய் | **அமாவாசை - வேள்வி** |
| வைகாசி | 15 | 29.05.2018 | செவ்வாய் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| வைகாசி | 30 | 13.06.2018 | புதன் | **அமாவாசை - வேள்வி** |
| ஆனி | 13 | 27.06.2018 | புதன் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆனி | 28 | 12.07.2018 | வியாழன் | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 11 | 27.07.2018 | வெள்ளி | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆடி | 26 | 11.08.2018 | சனி | **அமாவாசை - வேள்வி** |
| ஆடி | 27 | 12.08.2018 | ஞாயிறு | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆடி | 28 | 13.08.2018 | திங்கள் | **சித்தர்பீடத்தில் 47ஆவது ஆடிப்பூர பெருவிழா** |
| ஆவணி | 10 | 26.08.2018 | ஞாயிறு | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| ஆவணி | 25 | 09.09.2018 | ஞாயிறு | **அமாவாசை - வேள்வி** |
| புரட்டாசி | 08 | 24.09.2018 | திங்கள் | பௌர்ணமி – ஓம் சக்தி விளக்கு பூஜை |
| புரட்டாசி | 22 | 08.10.2018 | திங்கள் | **அமாவாசை - வேள்வி** |

**வாரம் ஒரு நாள்:**

**"வாரத்துக்கு ஒரு நாள் உணவுக் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும்."**


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**

**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.

# Divine Miracles at Melmaruvathur

## An experience with Mother:

Three Engineers from Japan had come to Chennai as guests of the industrialist Mr.C.H.Krishnamoorthy Rao whose industrial unit is in Vandalur near Chennai. They were: Mr.Yamaguchi> Mr.Takasaki and Mr.Katayama. They were all world-renowned technical professionals. Krishnamoorthy Rao took them to Melmaruvathur. Mother was delivering Her divine revelations in the Mandapam.

The three Japanese were called out by their names. The three of them gave the apples that they had brought to Mother as a mark of reverence to Her. Mr.Krishnamoorthy Rao accompanied them as an interpreter. The Japanese bowed low as per their custom and sat. Mother knelt and lowered Her hand as the Buddhists do and said ‘Buddham Saranam Gachami’ twice. The three Japanese were surprised to hear this! Next, Mother looked at Takasaki and said “Son, by birth you are a Christian, a true Christian at that. You are performing all your deeds with truth, sincerity and dedication. I have accepted them. You have reached a level where there is no rebirth”. The Japanese were stunned on hearing this. Do you know why? This was because even his two friends did not know that he was a Chritian. Krishnamoorthy Rao was also unaware of this.

Mother then looked at the other two Japanese and said: “The Japanese have great faith in God. Whatever they do, they do it with care and this culture is inborn in them. They consider work as worship. That is why they were able to build up their nation from ruins much to the wonder of the rest of the world.” Saying this, She looked at Krishnamoorthy Rao and said, “Son! Your association with these people will benefit you. You have got this by God’s Grace. Make use of it”.

Then She moved Her hand over an apple. She opened Her palm and there was a silver ring in Her palm. She gave it to Takasaki and asked him to wear it on his little finger. When Takasaki wore it, the ring fitted him as if it was made with his measurement.

Next, She took another apple and brought forth a gold ring similarly. She gave it to Yamaguchi and asked him to wear it in his little finger that fitted him. She then took the third apple and brought out an expensive coral. Mother gave it to Katayama. The Japanese were overwhelmed with surprise and joy. They left with happiness having benefited by Mother’s grace!

***

## உயிர் உள்ளவற்றுக்கு...

“உயிர் உள்ளவற்றுக்குத்தான் உணவு, தண்ணீர், காற்று தேவை.”

## பெயர் வைத்தது யார்?

“மேடு, பள்ளம், செடி, கொடி, ஆண், பெண், சூரியன், சந்திரன் என்றெல்லாம் இயற்கைக்குப் பெயர் வைத்தது யார்? மனிதர்களாகிய நீங்கள்தான் பெயர் வைத்துக்கொண்டீர்கள். இயற்கையின் உருவத்துக்கு யார் பெயர் வைத்தது? ஆன்மாவிற்கு உருவமும் கிடையாது. பெயரும் கிடையாது.”

அன்னையின் அருள்வாக்கு

# Melbourne - Mandrams – Upcoming Events – April 2018

## Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram
## மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்

(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா

P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - E-mail: melbourne.mandram@gmail.com
Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194 - Facebook : : https://www.facebook.com/MM2193

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Dandenong - 01.04.2018 | Sunday | பங்குனி | 18 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 06.04.2018 | Friday | பங்குனி | 23 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 08.04.2018 | Sunday | பங்குனி | 25 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 13.04.2018 | Friday | பங்குனி | 30 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 15.04.2018 | Sunday | சித்திரை | 02 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 20.04.2018 | Friday | சித்திரை | 07 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 22.04.2018 | Sunday | சித்திரை | 09 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 27.04.2018 | Friday | சித்திரை | 14 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 29.04.2018 | Sunday | சித்திரை | 16 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**15.04.2018 – ஞாயிறு - அமாவாசை, 29.04.2018 – ஞாயிறு- பௌர்ணமி**

## வழிபாடு: அன்றும் - இன்றும்:

"மனிதகுலம் ஒரு காலத்தில் பாம்பு, சூரியன், சந்திரன் ஆகிய இயற்கையை வழிபடத் தொடங்கியது.

அதன்பிறகு ஒரு சித்தனை உருவம் வைத்து வழிபட்டது. பிறகு சிலை வடித்து, ஒரு தெய்வம் என்று சொல்லி வழிபட்டது. பிறகு யேசு என்றது, அல்லா என்றது.

வழிபாடு என்பது ஒழுங்காக அமையும்போது, மனித குலத்திற்கு நன்மை உண்டாகும். அது வழிதவறிப் போகும்போது அழிவு தான் உண்டாகும்.

மிருகங்களிடம் ஒரு குணம் மட்டுமே உண்டு. ஆனால் மனிதனிடம் உள்ள ஐம்புலன்களும் ஐந்து மிருகங்களுக்குச் சமம். இவற்றைக் கட்டுப்படுத்தி முன்னேறுவதற்காகவே வழிபாடு

கலச விளக்கு யாக பூசைகளெல்லாம் உங்களுக்குக் கற்றுத் தருகிறேன்.

செங்கல் கொடு! சிமெண்ட் கொடு! எனச் சொல்லி உங்களைத் தருமம் செய்யச் சொல்லி உங்களுக்கு அதனால் பலன் தருகிறேன். பலன் தருவதோடு நில்லாமல் உங்கள் ஆன்மாவைச் சுத்தம் செய்து கொண்டும் வருகிறேன். மேலும் மேலும் அழுக்குகளை ஏற்றிக் கொள்ளாமல் நீங்கள் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்."

- **அன்னையின் அருள்வாக்கு**

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

## 2018

| | | | | |
|---|---|---|---|---|
| 02.04.2018 | திங்கள் | பங்குனி | 19 | பங்குனி திங்கள் -3 |
| 04.04.2018 | புதன் | பங்குனி | 21 | சங்கடஹர சதுர்த்தி |
| 09.04.2018 | திங்கள் | பங்குனி | 19 | பங்குனி திங்கள் -4 |
| 12.04.2018 | வியாழன் | பங்குனி | 29 | ஏகாதசி விரதம் |
| 13.04.2018 | வெள்ளி | பங்குனி | 30 | பிரதோஷ விரதம் (EST) |
| 14.04.2018 | சனி | சித்திரை | 01 | **ஸ்ரீ விளம்பி- தமிழ் சித்திரை வருடப்பிறப்பு** |
| 15.04.2018 | ஞாயிறு | சித்திரை | 02 | **அமாவாசை விரதம் - வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 18.04.2018 | புதன் | சித்திரை | 05 | **கார்த்திகை** |
| 19.04.2018 | வியாழன் | சித்திரை | 06 | **சதுர்த்தி** |
| 20.04.2018 | வெள்ளி | சித்திரை | 07 | **கொடியேற்றம்**<br>**ஸ்ரீ வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் - மெல்போர்ண்** |
| 21.04.2018 | சனி | சித்திரை | 08 | **ஷஷ்டி** |
| 26.04.2018 | வியாழன் | சித்திரை | 13 | **ஏகாதசி** |
| 27.04.2018 | வெள்ளி | சித்திரை | 14 | பிரதோஷ விரதம் (EST) |
| 28.04.2018 | சனி | சித்திரை | 15 | **தேர் உற்சவம்**<br>**ஸ்ரீ வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் - மெல்போர்ண்** |
| 29.04.2018 | வியாழன் | சித்திரை | 16 | **பூரணை விரதம்**<br>**சித்திரைப் பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண் |
| 03.05.2018 | வியாழன் | சித்திரை | 20 | சங்கடஹர சதுர்த்தி |
| 04.05.2018 | வெள்ளி | சித்திரை | 21 | **முருகன் திருக்கல்யாணம்**<br>**ஸ்ரீ வக்ரதுண்ட விநாயகர் ஆலயம் - பேசின் - மெல்போர்ண்** |
| 11.05.2018 | வெள்ளி | சித்திரை | 28 | ஏகாதசி விரதம் |
| 13.05.2018 | ஞாயிறு | சித்திரை | 30 | பிரதோஷ விரதம் (EST) |
| 15.05.2018 | செவ்வாய் | வைகாசி | 01 | **கார்த்திகை**<br>**அமாவாசை விரதம் - வேள்வி – மேல்மருவத்தூர்** |
| 29.05.2018 | செவ்வாய் | வைகாசி | 15 | **பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்போர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம் - சிட்னி<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் |
| 03.06.2018 | ஞாயிறு | வைகாசி | 20 | **திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மன்றம் மெல்போர்ண் அவுஸ்திரேலியா (AMMA) |

## உள்ளிருக்கும் ஆன்மாவுக்குப் பயப்படு!

*“மின்சாரத்தைத் தொட்டால் ஷாக் அடிக்கும் என்று பயப்படுகிறாய்.*
*நெருப்பைத் தொட்டால் சுடும் என்று பயப்படுகிறாய்.*
*இப்படியெல்லாம் வெளியுலகப் பொருள்களுக்குப் பயப்படுகிறாய்.*
*ஆனால் உன் உள்ளே இருக்கும் ஆன்மாவிற்குப் பயப்பட மாட்டேன் என்கிறாய்.”*

- **அன்னையின் அருள்வாக்கு**